# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 13 செவ்வாய்க்கிழமை 29.07.2025 கதிர் 269



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




## எதிரணிகள் ஓரணியில் திரண்டால்

# அடுத்த வருடம் அநுர ஆட்சியை கவிழ்க்க முடியும்

### இப்படி கம்மன்பில சொல்கின்றார்



**கொழும்பு, ஜூலை 29**

**“அடுத்த வருடம் இதே காலப் பகுதியில் பொருளாதார நெருக்கடி ஏற்படும். எனவே, எதிரணிகள் ஓரணியில் திரண்டால் அடுத்த வருடம் அதே காலப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை பெற்றுக்கொள்ள முடியும். அநுர தலைமையிலான இந்த ஆட்சியை மாற்றுவதற்குரிய தமது கடப்பாட்டை நிறைவேற்ற எதிரணிகள் முன்வரவேண்டும்.” - என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“2028 இல் இந்நாடு கடன் செலுத்தும் நாடாக மாறவேண்டுமெனில் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் 5 ஆக இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது. 2024 இல் நாம் இதனை செய்தோம். எனினும், தற்போது பொருளாதார வளச்சி வீதமானது 3.5 ஆகவும், அடுத்த வருடம் 3.1. ஆகவும் இருக்குமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அடைய முடியாமல்பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும்.

இந்நிலையில் எதிரணிகள் ஒன்றுபட்டால் அடுத்த வருடம் அதே காலப் பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிரணிகள் ஓரணியில் திரண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

அடுத்த ஜனாதிபதி யார் என்ற விடயத்தை ஒரு புறம் வைத்துவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலை வென்றெடுக்க ஒன்றுபட வேண்டும்.

ஜனாதிபதி யாரென்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் பொறுப்பை எதிரணிகள் ஏற்க வேண்டும். எதிரணியை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் நான் இறங்கியுள்ளேன்.” - என்றார்.

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நாமல் பிணையில் விடுதலை



கொழும்பு, ஜூலை 29

அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாடாளுமன்ற

7 ➤





## யாழில் ஒருவர் படுகொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணத்தில் சகோதரியுடன் வசித்து வந்த

7 ➤

## நல்லூர் கந்தன் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மகோற்சவ திருவிழா

7 ➤

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்படும்

### பிரதமர் சத்தியம்



கொழும்பு, ஜூலை 29

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதுவும் மறைக்கப்படாது. எந்தத் தடைகள் வந்தாலும்

7 ➤

## வீட்டிலிருந்து மூவர் சடலங்களாக மீட்பு!

### குடும்பஸ்தர் யட்டிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் என்று தெரிவிப்பு



கண்டி, ஜூலை 29

கண்டி மாவட்டம், யட்டிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் (ஐக்கிய மக்கள் சக்தி)

7 ➤



# துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சீன வாகனங்கள்

கொழும்பு, ஜூலை 29

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சீன வாகனங்கள் மோட்டார் திறன்களில் உள்ள முரண்பாடுகள் காரணமாக, துறைமுகத்தில் கிட்டத்தட்ட 1000 சீனத் தயாரிப்பு டீலுனு மின்சார வாகனங்களை இலங்கை சுங்கத்திணைக்களம் தடுத்து வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது இறக்குமதி வரிகளை நேரடியாகப் பாதிக்கும் என அறிவிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த வாகனங்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த மாதம் ஆறு தடவைகளாக இறக்குமதி செய்யப்பட்ட குறித்த ரக வாகனங்கள் அனைத்தும் 100 கிலோவோட் மோட்டார் திறன்களை கொண்டவை என்று அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும் அவற்றின் உண்மையான திறன் 150 கிலோவோட்ஸாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இது பொருந்தக்கூடிய கலால் வரியை கணிசமாக அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. தற்போதைய வரி விதிகளின் கீழ், 100 கிலோவோட்ஸ் மின்சார வாகனத்துக்கு நேரடி வரியாக 2.4 மில்லியன் ரூபாய்கள் விதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் 150 கிலோவோட்ஸ் பதிப்பிற்கு 5.4 மில்லியன் ரூபாய் வரை வரி விதிக்கப்படலாம், இந்த நிலையில் குறைந்த கிலோவோட்ஸ் திறனை அறிவித்து, அதிக வரிகளைத் தவிர்ப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்து சுங்கத்திணைக்களம் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓய்வூதியம் ரத்து செயதால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 29

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ரத்து செய்யப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதாக, ஓய்வுப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது கூட்டமைப்பின் செயலாளர் பிரேமசிறி மானகே எச்சரித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேர் ஓய்வு பெற்று ஓய்வூதியத்தை நம்பி உள்ளனர்.

மேலும், ஜேவிபியின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியலில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில் அவர்களின் ஓய்வூதியம் குறைக்கப்பட்டால் அவர்களுக்கு என்ன நடக்கும் என்று மானகே கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பாக சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் மற்றும் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்திடம் முறையிடப் போவதாகவும் மானகே எச்சரித்துள்ளார்.

முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை ரத்து செய்வதற்கும், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான சிறப்பு உரிமைகளை ரத்து செய்வதற்கும் ஒரு வரைவு சட்டத்தை அமைச்சரவை கடந்த மாதம் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயக்கொடிக்கு ஓகஸ்ட் 6 வரை விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர நீதிவானால் இதற்கான உத்தரவு இன்று பிறப்பிக்கப்பட்டது.

திட்டமிட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மே என்பவரால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொய்யான முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்த குற்றத்துக்காக அவர் நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, உடல் நலக்குறைவு காரணமாக ராகம வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.



# சிங்களம் மற்றும் திவெஹி ஆகிய மொழிகள் ஒரே வேரில் இருந்து வந்த மொழிகள் ஆகும்



கொழும்பு, ஜூலை 29

மாலைதீவு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்கு நம்பகமான இடமாக இலங்கையை எப்போதும் பார்க்க முடியும் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கான தனது அரச விஜயத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் முழுமையான உரை பின்வருமாறு,

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகள், நட்பு கூட்டாண்மை, நெருங்கிய நட்புறவு மற்றும் எதிர்கால ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையிலான மாலைதீவுக்கான எனது முதல் அரச விஜயத்தில் மாலேயிற்கு வருகை தரக்கிடைத்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பயணம் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுக்குப் புதிய உற்சாகத்தையும் பலத்தையும் சேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையும் மாலைதீவுகளும் முறையான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் எனது மாலைதீவு விஜயம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

எனக்கும் எனது பிரதிநிதிகளுக்கும் கிடைத்த அழைப்பிற்கும் அமோக வரவேற்புக்கும் விருந்தோம்பலுக்கும் அதிமேதகு ஜனாதிபதி முகமத் முய்சு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நீண்ட கால உறவு உள்ளது.

இந்து சமுத்திரத்தில் உள்ள நமது இரு நாடுகளும் பழங்கால கடல்வழி வர்த்தகப் பாதைகள் மற்றும் பொதுவான வரலாறு ஆகியவற்றுடன் நமது தொடர்புகளால் வளம் பெற்றுள்ளன.

சிறிது நேரத்திற்கு முன்பு, ஜனாதிபதி முய்சுவும் நானும் எங்கள் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். நமது உறவுகளின் தற்போதைய நிலை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டதுடன், மேலும் எதிர்காலத்தில் பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் நமது ஒத்துழைப்பை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்தும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். எப்போதும் இலங்கைக்கு வழங்கும் நிலையான ஆதரவிற்கு ஜனாதிபதி முய்சு மற்றும் மாலைதீவு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

நமது மக்களின் பொது நலனுக்காக நமது ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், நமது உறவை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி முய்சுவும் நானும் இனங்கண்டோம். மாலைதீவில் ஏராளமான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியதற்காக ஜனாதிபதி முய்சுவுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மாலைதீவின் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பை காண்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதேபோல், இலங்கையில் உள்ள மாலைதீவு மக்கள், இலங்கை பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்பை நாங்கள் பாராட்டுகிறோம்.

கல்வித் துறையில் இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையே வலுவான பங்காளித்துவம் உள்ளது. பல ஆண்டுகளாக, இலங்கையர்களாகிய நாங்கள் மாலைதீவு மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்கு கல்வி வழங்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளோம். இத்துறையில் மேலும் ஒத்துழைப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து ஜனாதிபதி முய்சுவும் நானும் கலந்துரையாடினோம். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு மற்றும் முக்கிய துறைகளில் முதலீடுகள் குறித்தும் நாங்கள் கவனம் செலுத்தினோம். மாலைதீவு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளுக்கு நம்பகமான இடமாக இலங்கையை எப்போதும் பார்க்க முடியும் என்று நான் தெரிவிக்கிறேன்.

முதலீட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கை தற்போது உருவாக்கி வருகின்ற அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அடைவதற்கான பொறிமுறை மற்றும் முதலீட்டாளர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தும் நிதி மற்றும் நிதி அல்லாத ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி முயிசுவிடம் தெரிவித்தேன்.

இலங்கையின் நவீன தொழில்நுட்ப பூங்காக்கள் பற்றியும் அவருக்கு விளக்கினேன்.

அவை முதலீட்டாளர் நேய மற்றும் உற்பத்தி - விசேட தொழில்துறை வலயங்களாக உள்ளதோடு, மாலைதீவு முதலீட்டாளர்கள் அந்த வலயங்களில் முதலீடு செய்யலாம்.

மேலும், மாலைதீவு வர்த்தகர்களுக்கு இலங்கையில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பம்ஃசெயற்கை நுண்ணறிவு, மீன்பிடி மற்றும் விவசாய செயலாக்கம், சுற்றுலா மற்றும் ஓய்வு, ஆதன வர்த்தகம் மற்றும் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் முதலீடு செய்யுமாறு நான் அழைப்பு விடுத்தேன். நமது இரு நாடுகளிலும் சுற்றுலாத் துறை ஒரு முக்கிய பொருளாதார காரணியாகும். இந்த சூழலில், சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பு குறித்தும் நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம்.

விசேடமாக விமானத் தொடர்புகளை மேம்படுத்துவதுடன், விமான சேவைகள் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வழிகள் குறித்தும் நாங்கள் கலந்துரையாடியோம். விவசாயத்துறை, இளைஞர்களை வலுவூட்டுதல் மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். இந்து சமுத்திரத்தில் உள்ள தீவு நாடுகளாக, மீன்பிடி மற்றும் கடல்சார் துறையின் பெரும் ஆற்றலை நாங்கள் இனங்கண்டோம். நவீன மற்றும் நிலைபேறான மீன்பிடி நடைமுறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் நாம் கலந்துரையாடினோம்.

இலங்கை மீன்பிடிக்கப்பல்கள் மாலைதீவு கடல் எல்லை வழியாக அரபிக் கடலுக்குள் தடையின்றிச் செல்வதற்கு போக்குவரத்து வழிகளை நிறுவுவது குறித்தும் நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். இலங்கையும் மாலைதீவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் உள்ளன. இலங்கை மற்றும் முழு இலங்கை சமூகத்தையும் நிலைபேறான நிலைக்கு உயர்த்துவதற்காக சமூக அபிவிருத்தி, சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் தார்மீக அபிவிருத்தி ஆகிய மூன்று முக்கிய கூறுகளின் ஊடாக செயற்படும் 'ஊடநயெ ளுசை டுயமெய' வேலைத்திட்டத்தை எனது அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதுபற்றி நான் ஜனாதிபதி முய்சுவுக்கு விளக்கினேன். திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கான 'ஆயடனைநள ஊடநயெ நுளெைழஅநவெ' திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதற்காக ஜனாதிபதி முயிசுவைப் பாராட்டினேன்.

காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் அதிகரித்தல் ஆகிய சவாலை எதிர்கொள்ள பின்பற்ற வேண்டிய பொதுவான முயற்சிகளின் முக்கியத்துவத்தை நாங்கள் இனங்கண்டோம். இலங்கை 2030 ஆம் ஆண்டாகும்போது அதன் மின்சாரத்தில் 70ூ புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த இலக்கை அடையும் நோக்கில், நமது இரு நாடுகளுக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்த நான் பரிந்துரைத்தேன்.

பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் வலுவான கலாசார உறவுகள் உள்ளன. எங்கள் மொழிகள் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டுள்ளதுடன், சிங்களம் மற்றும் திவெஹி மொழி ஆகிய இரண்டும் ஒரே வேரில் இருந்து வந்த மொழிகள் ஆகும். மக்களிடையேயான தொடர்புகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன், கலாசாரம் மற்றும் பாரம்பரியத் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்தினோம். பிராந்திய மற்றும் பலதரப்பு ஒத்துழைப்புத் துறையில் இலங்கைக்கு மாலைதீவு வழங்கும் ஆதரவை நான் பாராட்டியதுடன், மாலைதீவுக்கு இலங்கை ஆதரவளிக்கும் என்று நான் உறுதி அளித்தேன்.

நமது இரு நாடுகளும் பல்வேறு சர்வதேச அமைப்புகளில் ஒருவருக்கொருவர் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றன. அந்த ஒத்துழைப்பை தொடர நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

அதிமேதகு ஜனாதிபதி மொஹமட் முய்சுவுக்கு இரு தரப்பினருக்கும் வசதியான நாளில் இலங்கைக்கு வருமாறும் அழைப்பு விடுத்தேன். எனது விஜயத்தின் போது நான் வர்த்தக மன்றத்தில் உரையாற்றுவதுடன் மாலைதீவில் வாழும் இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளேன்.

அதிமேதகு ஜனாதிபதி முகமது முய்சு அவர்களே, எனக்கும் எனது குழுவினருக்கும் வழங்கப்பட்ட அன்பான விருந்தோம்பலுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

மாலைதீவுடனான ஒத்துழைப்பை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். எதிர்வரும் ஆண்டுகளில் இந்த ஒத்துழைப்பு தொடர்ந்து வலுப்பெறும் என்பது உறுதி.
(ஐ)

# மட்டக்களப்பில் கறுப்பு யூலை படுகொலை செம்மணி புதைகுழி சர்வதேச நீதி வேண்டி ஆர்ப்பாட்டம்


கறுப்பு யூலை பேரவலத்தை நினைவுகூர்ந்தும் மற்றும் வடக்கு கிழக்கில் நிகழ்த்தப்பட்ட மனித படுகொலைகளுக்கு செம்மணி புதைகுழிக்கும் சர்வதேச நீதிவேண்டி மட்டக்களப்பில் ஆர்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த போராட்டமானது, நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்த இந்த கவனயீர்பு ஆர்பாட்டத்தில் கிறிஸ்தவ குருமார்கள் காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர் கலந்துகொண்டுள்ளனர்.

கறுப்பு யூலை சிறிலங்காக அரச பயங்கரவாதத்தின் கொடூரம், செம்மணி புதை குழிக்கு சர்வதேச நீதி வேண்டும், தமிழ் தாயகத்தில் இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட மனித புதைகுழிகளுக்கு சர்வதேச நீதி வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும், போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.(ஐ)







# தூத்துக்குடியில் 3,000 ஏக்கரில் கப்பல் கட்டும் தளம் அமைக்க ஒன்றிய அரசு திட்டம்

தூத்துக்குடியில் 3,000 ஏக்கரில் கப்பல் கட்டும் தளம் அமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. தூத்துக்குடியை முக்கிய கப்பல் கட்டும் தளமாக உருவாக்க ஒன்றிய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. விரிவாக்கப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் திறந்து வைத்ததை அடுத்து துறைமுகம் மேம்படுத்த ஒரு மெகா திட்டமிட்டுள்ளது. 5 மாநிலங்களில் 15,000 ஏக்கரில் ரூ.1.50 லட்சம் கோடி மதிப்பீட்டில் கப்பல் கட்டுமான தொகுப்புகள் செயல்பட உள்ளன. ஆந்திரா, ஒடிசா, குஜராத், மராட்டியம் வரிசையில் தமிழ்நாட்டில் தூத்துக்குடி துறைமுகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கப்பல் கட்டும் தளத்துக்காக துறைமுகம் அருகே 1,800 ஏக்கர் இடம் தேர்வு விரைவில் கூடுதலாக 1,200 ஏக்கர் இணைக்கப்பட்டுள்ளது.

# வழக்கறிஞர் வாஞ்சிநாதன் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை

ஐகோர்ட் மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், சாதிரீதியாக நடந்து கொள்வதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு வழக்கறிஞர் வாஞ்சிநாதன் புகார் அனுப்பியிருந்தார். இந்தப் புகார், வழக்கறிஞர்கள் வாட்ஸ்அப் குழுவில் வெளியானது. இதனிடையே, வழக்கறிஞர் வாஞ்சிநாதன் ஆஜரான ஒரு வழக்கின் விசாரணை நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், கே.ராஜசேகர் முன் கடந்த 25ம் தேதி வந்தது. அப்போது, வழக்கறிஞர் வாஞ்சிநாதன், நீதிபதிகள் உத்தரவின்படி நேரில் ஆஜரானார். அப்போது அவரிடம், “இரு நீதிபதிகளில் ஒருவர் (ஜி.ஆர்.சுவாமிநாதன்) சாதி பாகுபாடுடன் செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளீர்கள். அதே நிலைப்பாட்டில் தான் தற்போதும் இருக்கிறீர்களா?” என்றனர். அப்போது வாஞ்சிநாதன், “பட்டியலிடப்பட்ட அந்த வழக்கில் இருந்து விலகி விட்டேன். எழுத்துப்பூர்வ உத்தரவு பிறப்பித்தால் பதில் அளிக்கிறேன்” என்றார்.

இதையடுத்து, நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், வாஞ்சிநாதன் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கஉத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளி வைத்தனர். இந்த விவகாரம் மாநிலம் முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஓய்வு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை கைவிட வலியுறுத்தினர். இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், கே.ராஜசேகர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது வாஞ்சிநாதன் நேரில் ஆஜரானார். அவரிடம் நீதிபதி சுவாமிநாதன், “என் மீதான சாதிரீதியான குற்றச்சாட்டில் அதே நிலையில் இப்போதும் இருக்கிறீர்களா” என்றார். இதற்கு வாஞ்சிநாதன், “நான் எங்கே, எப்போது, பேசினேன் என எழுத்துப்பூர்வ உத்தரவு வழங்கினால் பதிலளிக்கிறேன்” என்றார்.

இதையடுத்து, பல்கலைக்கழக வேந்தருக்கான அதிகாரம் வழங்கும் சட்டத்துக்கு தடை கோரிய வழக்கில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அமர்வு நடத்திய விசாரணையை வாஞ்சிநாதன் விமர்சனம் செய்து பேசிய வீடியோ ஒளிபரப்பப்பட்டது. “இதில் நீதித் துறையை கடுமையாக விமர்சனம் செய்து கருத்து தெரிவித்துள்ளீர்கள். அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?” என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கேட்டார். அதற்கு வாஞ்சிநாதன், “நீங்கள் ஏற்கனவே கேட்டதற்கு பதில் அளித்துள்ளேன். இப்போது நீங்கள் ஒரு வீடியோவை ஒளிபரப்பி, அது குறித்து கேட்கிறீர்கள். வீடியோவில் எப்படி வேண்டுமானாலும் மாற்றம் செய்யலாம். வீடியோவை ஒளிபரப்பி, அதற்கு விளக்கம் கேட்பது முறையல்ல. கேட்பது வழக்குக்கு சம்பந்தம் இல்லாதது. வீடியோ தலைப்புக்கு நான் பொறுப்பல்ல. எழுத்துப்பூர்வமாக கேட்டால் பதில் அளிக்கிறேன்.

மேலும், உங்கள் மீது நான் தெரிவித்த புகாரை நீங்களே விசாரிக்க முடியாது” என்றார். அதற்கு நீதிபதி, “உங்கள் மீது இதுவரை எந்த நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீங்கள் வைத்த குற்றச்சாட்டில் தற்போதும் அதே நிலையில் தான் இருக்கிறீர்களா என விளக்கம் கேட்கத்தான் அழைத்தோம். அதுவும் மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மனுதாரர் ஒருவரின் வழக்கறிஞராக நீங்கள் இருந்ததால் உங்களை அழைத்தோம். அதற்குள் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுத்ததாக நீங்களும், உங்கள் பின்னால் இருப்பவர்களும் பேசி வருகிறீர்கள். நீங்கள் என்னுடைய தீர்ப்பினை விமர்சிப்பதற்கு நூறு சதவீதம் உரிமை உள்ளது. அதற்கு நானே ஆதரவு தெரிவிக்கிறேன். ஆனால், சாதி பாகுபாட்டுடன் தீர்ப்பளிப்பதாக குற்றம் சாட்டுவது என்பது வித்தியாசமானது. அதை என்னால் ஏற்க முடியாது. நாங்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல.

இதை உங்களுடன் இருக்கும் வழக்கறிஞர்களிடமும், ஓய்வு பெற்ற நீதிபதிகளிடமும் கூறுங்கள். எனது





நீதித்துறை செயல்பாட்டில் யாரும் தலையிட முடியாது. உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் அளித்திருக்கும் புகாருக்கும், இங்கு நடைபெறும் விசாரணைக்கும் எந்த தொடர்பும் இல்லை. தொடர்ந்து 4 ஆண்டுகளாக நீதித்துறையை, நீதிபதிகளை விமர்சனம் செய்து வருகிறீர்கள்? அதற்கு ஆதாரமாக குறைந்தபட்சம் 50 வீடியோக்களை காட்ட முடியும். சமூக வலைத்தளங்களில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் சாதிரீதியாக நடந்து கொள்கிறார் எனக் கூறியுள்ளீர்கள். அது உண்மை என்றால் நீதிமன்ற அவமதிப்பு ஆகும். என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?” எனக் கேட்டார். அதற்கு வாஞ்சிநாதன், “எழுத்துப்பூர்வமாக உத்தரவிட்டால், பதிலளிக்க தயார்” என்றார். பின்னர் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், “வாய்மொழியாக பதில் அளித்தால் போதும். பதிலளிக்க தயங்குவது ஏன்? உங்களை நீதிமன்றத்தில் கோமாளி என கூறியதற்கு நான் வருத்தப்பட்டேன். ஆனால் இப்போது மீண்டும் கூறுகிறேன். நீங்கள் ஒரு கோமாளி. உங்களை எல்லாம் போராளி என யார் கூறியது? நீங்கள் காமெடி பீஸ். சமூக ஊடகங்களில் பேசியது குறித்து தான் கேட்கிறேன். உச்சநீதிமன்ற நீதிபதிக்கு புகார் அளித்தது குறித்து எனக்கு தெரியாது. அது குறித்து நான் எதுவும் கேட்கவில்லை” என்றார். இதையடுத்து நீதிபதிகள், “வழக்கறிஞர் வாஞ்சிநாதன் தமிழக பல்கலைக்கழக வேந்தர் நியமனம் தொடர்பான வழக்கில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை விமர்சித்தும், பொது ஊடகங்களில் நீதித்துறையை விமர்சித்தும் பேசியுள்ளார். நேரில் ஆஜராக உத்தரவிட்டபடி அவர் ஆஜரானார். அப்போது அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டப்படவில்லை.

அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு எடுக்கப்படாத நிலையில், இதில் தலைமை நீதிபதி தலையிட வேண்டும் என ஓய்வுபெற்ற நீதிபதிகள் கோரியது துரதிஷ்டவசமானது. இன்றும் வாஞ்சிநாதன் உரிய பதில் அளிக்கவில்லை. அவரின் செயல்பாடு நீதிமன்ற அவமதிப்பு என கருதுகிறோம். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க தலைமை நீதிபதி அமர்வுக்கு பரிந்துரைக்கிறோம்” என உத்தரவிட்டனர்.

உங்களை நீதிமன்றத்தில் கோமாளி என கூறியதற்கு நான் வருத்தப்பட்டேன். ஆனால் இப்போது மீண்டும் கூறுகிறேன். நீங்கள் ஒரு கோமாளி. உங்களை எல்லாம் போராளி என யார் கூறியது? நீங்கள் காமெடி பீஸ். (ஐ)



# நிமிஷா பிரியாவின் மரண தண்டனை ரத்தா?

ஏமன் நாட்டைச் சேர்ந்தவர் கொல்லப்பட்ட வழக்கில் கேரளாவை சேர்ந்த செவிலியர் நிமிஷா பிரியாவிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்து என வெளியான தகவலை ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. தொழில் பங்குதாரரை கொன்றதாக கேரள நர்ஸ் நிமிஷா ப்ரியாவுக்கு ஏமனின் சனா நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அதன்படி நிமிஷா ப்ரியாவுக்கு கடந்த 16ம் தேதி மரண தண்டனை விதிக்கப்பட இருந்தது. நிமிஷா ப்ரியாவை காப்பாற்ற கோரி உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய் யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இந்தியாவின் கிராண்ட் முப்தி என அழைக்கப்படும் கேரள மாநிலம் காந்தரபுரம் ஷேக் அபுபக்கர் முஸ்லியார் என்பவர் ஏமனில் உள்ள மதத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, கடைசி நிமிடத்தில் நிமிஷா ப்ரியாவின் மரண தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் நிமிஷா ப்ரியா விவகாரம் தொடர்பாக ஏமனில் உள்ள அதிகாரிகளுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில் கேரள செவிலியர் நிமிஷா பிரியாவின் மரண தண்டனையை ஏமன் அரசு ரத்து செய்தது. மரண தண்டனையை ஏமன் முழுமையாக ரத்து செய்ததாக இந்தியாவின் கிராண்ட் முஃப்தி காந்தபுரம் ஏ.பி. அபுபக்கர் முஸ்லியார் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது குறித்து அபூபக்கர் முஸ்லியார் கூறியதாவது: முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிமிஷா பிரியாவின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. சனாவில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில், முன்னர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரண தண்டனையை முற்றிலுமாக ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில் செவிலியர் நிமிஷா பிரியாவிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்து என வெளியான தகவலை ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. நிமிஷா பிரியாவின் மரண தண்டனை ரத்து செய்யப்பட்டதாக வெளியான தகவலை ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் மறுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# உனக்கான வாய்ப்பை நீயே உருவாக்கு!



எந்த சூழ்நிலையில் பிறப்போம் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் எந்த சூழ்நிலையில் பிறந்தாலும் ஜெயிக்கலாம் என்பது மட்டும் எல்லோரும் அறியவேண்டிய உண்மை. இதை நிரூபிக்கும் உதாரணங்களுக்கு நாம் எங்கும் அலைய வேண்டியதில்லை. நம் நாட்டில் ராமேஸ்வரத்தில் ஒரு படகோட்டியின் மகனாகப் பிறந்து, இந்திய தேசத்தின் ஜனாதிபதியாகவும், அணுவிஞ்ஞானியாகவும், ஏவுகணை நாயகனாகவும் உயர்ந்த உலக உத்தமர் கலாம் அவர்கள் நமக்கெல்லாம் மிகச்சிறந்த உதாரணம். ஆகவே உங்களுடைய அறிவாற்றலை வளர்த்தால் போதும் இந்த உலகம் உங்களை தேடி வரும். வாசல்கள் தோறும் வாய்ப்புகள் இருக்கும். திறமைகள் இருந்தால் அவை நம்மை ஓடிவா! என்று அழைக்கும். அறிவுத்திறனுடன் அதைச்செயலாக்கும் திறனையும் வளர்த்துக்கொள்வது அவசியம்.

எப்பொழுதும் சுயநினைவுடன் அதாவது, விழிப்பு நிலையில் உள்ளவர்கள் சூழ்நிலைகளுக்குள்ளாக தங்களைக் கரைத்துக் கொள்வதில்லை. ராமலிங்க அடிகளார் சொன்னார், 'பசித்திரு, தனித்திரு, விழித்திரு' என்று, அதாவது, எப்போதும் அறிவுதேடுவதில் பசியுடன் இருக்க வேண்டும் என்பதுடன், கொஞ்சம் வயிற்றுப் பசி இருக்கட்டும். வயிறு முட்ட உணவை உள்ளே தள்ளிவிட்டால் சோர்வும், தூக்கமும் தான் வரும். அப்பொழுது சிந்திக்க மூளை சரியாக வேலை செய்யாது. அறிவுப் பசியுடன் வயிற்றுப் பசியும் கொண்டிருக்கும் போதுதான் மனம் விழிப்புணர்வுடன் செயல்படுகிறது. 'தனித்திரு' என்பது நாம் எப்போதும் தனித்தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதாவது உங்களுக்கு ஏதாவது ஒரு தனித்தன்மை இருக்கும். அந்த தனித்தன்மை வெளிப்படும் விதமாக நீங்கள் நடந்துகொள்ளுங்கள். உங்களுக்குள்ளாக இருக்கும் உன்னத ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்துகொண்டே இருங்கள்.

'விழித்திரு' என்றால் மனம் எப்போதும் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்று அர்த்தம். கண்களை திறந்து வைத்திருப்பதல்ல விழிப்பு நிலை என்பது ஆம் செய்கின்ற செயலில் கருத்தூன்றி இருப்பதே விழிப்பு நிலை. மேலும் ஒவ்வொரு நாளும் நாம் பல பாத்திரங்களை ஏற்கிறோம். அதாவது குடும்பத்தில், தொழிலில் சமுதாயத்தில் என்று பல பொறுப்புகளை சுமக்கவேண்டிய சூழ்நிலையில், அந்தப் பாத்திரமாகவே மாறி விடுவதோடு அந்தந்தப் பொறுப்புகளை ஈடுபாட்டுடனும், முழு மனதுடனும் செய்து முடிக்க வேண்டும். வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஏற்கும் வேடத்துக்குத் தக்கவாறு உண்மையாகவும், நேர்மையாகவும் செயல்பட்டு அந்தந்தப் பாத்திரத்துக்கு உயிரூட்ட வேண்டும். இதற்கு உதாரணமாய் இந்த சாதனை பெண்மணியை சொல்லலாம்.

ஆப்கானிஸ்தானில் பிறந்து, அகதியாக ஈரானில் வளர்ந்தவர் ஜாரா யகனா. அகதிகளின் வாழ்க்கை கடினமானது. ஜாராவின் அம்மா கடின உழைப்பாளி. தன் குழந்தைகளுக்கு அனைத்து வேலைகளையும் பழக்கினார். சிறுவயதில் இருந்தே ஜாராவுக்கு படிப்பின் மீது அளவற்ற ஆர்வம். அம்மாவின் பார்வையில் பொறுப்பற்ற குழந்தையாகத் தெரிந்தார். 11 வயதில் சமையல் செய்யும்போது தீய்ந்து போவது தெரியாமல், விக்டர் ஹ்யூகோ எழுத்துக்களைப் படித்துக் கொண்டிருந்தார் ஜாரா. அம்மாவுக்கு வந்த கோபத்தில் அடி பின்னி விட்டார். ஆனாலும் சமையலை விடப் புத்தகங்களே ஜாராவை ஈர்த்தன.

13 வயதில் திருமணம். அவரை விட இரண்டு மடங்கு வயது அதிகமான கணவர். தாம்பத்தியம் குறித்து எதுவும் அறியாத ஜாரா, அன்று இரவு கணவரின் அறைக்குள் நுழைந்தார். கண்விழித்துப் பார்த்தபோது ஒரு மருத்துவமனையில் படுத்திருந்தார். ஒரே இரவில் திருமண வாழ்க்கை அவருக்கு நரகமாக மாறி இருந்தது. அடுத்த ஆண்டே ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார் ஜாரா. பிறவிக் குறைபாட்டுடன் பிறந்த அந்தக் குழந்தை நான்கே ஆண்டுகளில் இறந்தும் போனது. இந்த நிலையில் ஜாராவிடம் சண்டை போட்டுவிட்டு அவரது கணவர் வீட்டில் இருந்து வெளியேறினார். சிறிது நேரத்தில் ஜாராவின் வீடு தீப்பற்றி எரிந்தது. இரண்டு குழந்தைகளை அழைத்துக்கொண்டு வெளியேற முயன்றார். கதவு வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து மூன்று பேரையும் காப்பாற்றினர்.

இனியும் கணவருடன் வாழ்வதில் அர்த்தமில்லை என்கிற முடிவுக்கு வந்த ஜாரா. கிடைக்கும் வேலைகளைச் செய்து, குழந்தைகளைக் காப்பாற்றினார். ஒரு நண்பர் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சமையல் கலைஞர் வேலை கிடைத்தது. அம்மா கற்றுக் கொடுத்த சமையலும் ஜாராவின் படிப்பும், புதிய வாழ்க்கைக்குக் கை கொடுத்தன. தானே மீண்டும் வாழ்க்கையைக் கட்டமைத்தார். குழந்தைகளைப் படிக்க வைத்தார். நாடகங்களில் பங்கேற்றார். பெண் உரிமைகள் தொடர்பான இயக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தன்னிடம் இருக்கும் எழுத்துத் திறமையை கொண்டு தன்னை ஒருஎழுத்தாளராக உருவாக்கிக் கொண்டார். தன் வாழ்க்கையை மையமாக வைத்து பெண்கள் படும் துயரங்களை நாவலாக எழுத ஆரம்பித்தார். டுபாவ **of ashes** என்கின்ற பெயரில் அது புத்தகமாக வெளிவந்தது. மூன்றே மாதங்களில் ஆயிரம் பிரதிகள் விற்றது. ஆப்கானிஸ்தானில் கடந்த 10 ஆண்டுகளில் வேகமாக விற்ற புத்தகம் என்கிற சிறப்பையும் பெற்று இருக்கிறது ஜாராவின் நாவல்.

என் மகளும் நானும் எங்கள் சொந்தப் பெயரிலேயே நாவலில் வருகிறோம். அதிகாரம் என்பது இரு பாலினருக்கும் பொதுவானது. சமூகம் விவாதிக்காத பெண்களின் பல பிரச்னைகளை இந்த நாவல் மூலம் சொல்லி இருக்கிறேன். இந்த நாவலைப் படிக்கும் ஆண்கள் தாங்கள் இப்படிப்பட்ட ஒரு ஆணாக இருக்கக் கூடாது என்று நினைக்கின்றனர். இது ஒரு நல்ல மாற்றம். என் தோழிகளின் கணவர் நாவலைப் படித்த பிறகு வீட்டு வேலைகளில் தோழிக்கு உதவி செய்து வருவதாக சொன்னார். சமூகத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தினாலும் அது நாவலின் வெற்றிதான். என் முதல் மகள் நர்கீஸின் மரணம் குறித்து எழுதும்போது மிகவும் துன்புற்றேன். என்னால் மூன்று மாதங்களுக்கு எழுதவே முடியவில்லை நாவலை படிப்பவர்களும் என்னை போலவே உணர்வதாக சொல்கிறார்கள் என்கிறார் ஜாரா.

நீங்கள் ஒரு பெண்ணாக உங்கள் உரிமைகள் குறித்துப் பேசும்போது எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடும். ஆண்களுக்கு எதிரானதாக பார்க்கப்படும். உங்களை எப்படி தடுத்து நிறுத்தமுடியும் என்று யோசிப்பார்கள். அதற்காக அநியாயங்களைக் கண்டும் காணாமல் வாழக்கூடாது, இன்று நம் உரிமைகளுக்காக குரல் கொடுத்தால் தான் நம்முடைய எதிர்காலத் தலைமுறைப் பெண்கள் இந்த உலகில் மதிக்கப்படுவார்கள் என்கிறார் எழுத்தாளர் ஜாரா. காற்றை எதிர்த்துப் பட்டம் செல்வதைப்போல எதிர்ப்புகளை எதிர்த்துத்தான் வாழ்க்கையில் உயர வேண்டும். எதிர்ப்புகளைக் கண்டு முடங்கிவிடக் கூடாது. முயற்சிகளை அதிகப்படுத்த வேண்டும். சாதாரண மனிதன் பல வழிகளில் முயற்சிக்கிறான். ஆனால் சாதனை மனிதன் பற்பல வழிகளில் முயற்சிக்கிறான். ஆகவே எத்தகைய பிரச்னைகளாக இருந்தாலும், இவரைப்போல நமக்கான வாய்ப்பை நாமே உருவாக்கிக் கொண்டு பல்வேறு கோணங்களில் சிந்தித்து செயல்படுங்கள். வெற்றி உறுதி.

**'விழித்திரு' என்றால் மனம் எப்போதும் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்று அர்த்தம். கண்களை திறந்து வைத்திருப்பதல்ல விழிப்பு நிலை என்பது ஆம் செய்கின்ற செயலில் கருத்தூன்றி இருப்பதே விழிப்பு நிலை. மேலும் ஒவ்வொரு நாளும் நாம் பல பாத்திரங்களை ஏற்கிறோம். அதாவது குடும்பத்தில், தொழிலில் சமுதாயத்தில் என்று பல பொறுப்புகளை சுமக்கவேண்டிய சூழ்நிலையில், அந்தப் பாத்திரமாகவே மாறி விடுவதோடு அந்தந்தப் பொறுப்புகளை ஈடுபாட்டுடனும், முழு மனதுடனும் செய்து முடிக்க வேண்டும். வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஏற்கும் வேடத்துக்குத் தக்கவாறு உண்மையாகவும், நேர்மையாகவும் செயல்பட்டு அந்தந்தப் பாத்திரத்துக்கு உயிரூட்ட வேண்டும்.**




# அமெரிக்கா அழுத்தம்தான் போர் முடிவுக்கு வந்தது 26வது முறையாக அதிபர் ட்ரம்ப் திட்டவட்டம்



தாம் தலையிட்டு இருக்காவிட்டால், இந்தியா –பாகிஸ்தான் இடையேயான போர் தற்போது வரை தொடர்ந்து இருக்கும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார். பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளுக்கு பாடம் புகட்டும் வகையில், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. 4 நாட்களில் இந்த தாக்குதல் முடிவுக்கு வந்த நிலையில், இதற்கு தனது தலையீடு தான் காரணம் என்று டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார். அவரது கருத்துக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மக்களவையில் நேற்று மறுப்பு தெரிவித்தார்.

இந்த நிலையில் இங்கிலாந்து சென்றுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அந்நாட்டு பிரதமர் கெயர் ஸ்டார்மரை ஸ்காட்லாந்தில் உள்ள டர்ன்பெர்ரி ரிசார்ட்டில் சந்தித்து பேசினார். கம்போடியா – தாய்லாந்து இடையேயான போரை நிறுத்தியதை குறிப்பிட்டு பேசிய அவர், தாம் மட்டும் இல்லை என்றால் 6 பிரதான போர்கள் நம்மை சுற்றி நடந்து கொண்டிருக்கும் என்று கூறினார். இதில் இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த சண்டை தான் பெரிய மோதல் என்று குறிப்பிட்ட ட்ரம்ப், ஏனென்றால் இரு நாடுகளும் அணுசக்தி பலம் படைத்தவை என்று தெரிவித்தார். எனவே இரு நாடுகளின் தலைவர்களிடமும் போரை நிறுத்தவில்லை என்றால் வர்த்தகத்தை தொடர முடியாது என்று தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார். போரை நிறுத்துவதற்கு கொஞ்சம் சுயநலமாக செயல்பட வேண்டி உள்ளதாகவும் இவ்வாறு பல போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகவும் டிரம்ப் தெரிவித்தார். (ஐ)

## டிசிஎஸ்சில் 12 ஆயிரம் பேர் நீக்கம் ‘ஏஐ’ வளர்ச்சியால் பெரும் ஆபத்து:




‘ஏஐ’ தொழில்நுட்ப வளர்ச்சியால் பல்லாயிரம் ஊழியர்கள் பணிநீக்கம் செய்ய முடிவு செய்துள்ளதால் ஊழியர்கள் மத்தியில் கடுமையான வேலைப் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள், மாறிவரும் வணிகத் தேவைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் (ஏஐ) தேவைக்கு தங்களை மாற்றியமைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. சில நிறுவனங்கள் செயல்திறன் மற்றும் மறுசீரமைப்பு காரணமாக ஆட்குறைப்பு நடவடிக்கையை எடுப்பதாகக் கூறினாலும், டாடா போன்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் திறனுள்ள ஊழியர்கள் கிடைக்காததால் பணிநீக்கங்கள் அறிவித்து வருகின்றன. அந்த வகையில், இந்தியாவின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்), தனது உலகளாவிய ஊழியர்களில் சுமார் 2மூ, அதாவது சுமார் 12,261 ஊழியர்களைக் குறைக்க உள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் இந்த ஆண்டு 15,000க்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணிநீக்கம் செய்துள்ளது. இது தவிர, குறைந்த செயல் திறன் கொண்டவர்கள் எனக் கண்டறியப்பட்ட சுமார் 2,000 ஊழியர்களும் நிறுவனத்தை விட்டு வெளியேறியுள்ளனர். செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பை உருவாக்க சுமார் 80 பில்லியன் டாலர் முதலீடு செய்யும் நிலையில், மறுசீரமைப்பு அவசியம் என்று தலைமைச் செயல் அதிகாரி சத்யா நாதெல்லா தெரிவித்துள்ளார். அதேபோல், இன்டெல் நிறுவனம் இந்த ஆண்டில் மிகப்பெரிய ஆட்குறைப்பை அறிவித்துள்ளது. அந்நிறுவனம் தனது மொத்த ஊழியர்களில் கால் பங்கான சுமார் 24,000 பேரைப் பணிநீக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது. மெட்டா நிறுவனம் தனது விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் ஆக்மென்டட் ரியாலிட்டி தயாரிப்புகளைக் கையாளும் ‘ரியாலிட்டி லேப்ஸ்’ பிரிவில் புதிய ஆட்குறைப்பைச் செய்துள்ளது. (ஐ)



## தாய்லாந்து, கம்போடியா நாடுகள் போரை நிறுத்த ஒப்புக் கொண்டதாக மலேசியா பிரதமர் அறிவிப்பு

தாய்லாந்து, கம்போடியா நாடுகள் போரை நிறுத்த ஒப்புக் கொண்டதாக மலேசியா பிரதமர் அறிவித்துள்ளார். தாய்லாந்து, கம்போடியா இடையே போரை நிறுத்த மலேசியா பிரதமர் மத்தியஸ்தம் செய்து வந்தார். அன்வர் இப்ராஹிம் மத்தியஸ்தத்தால் இருநாடுகளும் நிபந்தனையின்றி போரை நிறுத்த ஒப்புதல் தெரிவித்தனர். எல்லையோரத்தில் உள்ள கோயிலை சொந்தம் கொண்டாடும் விவகாரத்தில் இருநாடுகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. (ஐ)

## எஞ்சின் பழுது–விமானம் அவசரமாக தரையிறக்கம்

வாஷிங்டனில் புறப்பட்ட சிறிதுநேரத்திலேயே போயிங் டிரீம்லைனர் விமானத்தில் எஞ்சின் கோளாறு ஏற்பட்டுள்ளது. வாஷிங்டனில் இருந்து ஜெர்மனிக்கு புறப்பட்ட விமானத்தில் திடீரென்று எஞ்சின் கோளாறு ஏற்பட்டது. இடதுபக்க எஞ்சின் பழுதானதை அடுத்து விமானிகள் ஆயுலுனுயுலு எனக் கூறி அவசர உதவி கோரினர். விமானம் 5000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது இடதுபக்கத்தில் உள்ள எஞ்சின் பழுதானது. எஞ்சின் பழுதானதை அடுத்து எரிபொருள் தீர, விமானம் வானில் சிறிது நேரம் வட்டமடித்தது. எரிபொருள் தேவையான அளவுக்கு தீர்ந்த பிறகு விமானம் மீண்டும் வாஷிங்டனிலேயே தரையிறங்கியது. (ஐ)

## இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் 36 பேர் பலி

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 36 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 2023 அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக காசா மீது தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. நேற்று காசாவின் பல இடங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் குறைந்தது 36 பாலஸ்தீனியர்கள் பலியானார்கள். காசா நகரம், டெய்ர் அல்-பலா மற்றும் முவாசி ஆகிய இடங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

மத்திய காசாவில் உள்ள அவ்தா மருத்துவமனை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. தெற்கு நகரமான கான் யூனிஸின் மேற்கே உள்ள முவாசி பகுதியில் உள்ள வீடு தாக்கப்பட்டதில் கர்ப்பிணிப் பெண்ணும் அவரது குழந்தை உள்பட 11 பேர் கொல்லப்பட்டனர். கான்யூனிசில் நடந்த தாக்குதலில் 11 பேரும், மற்ற இடங்களில் 14 பேரும் கொல்லப்பட்டனர். (ஐ)



## ஈஸ்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.” - என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்கின்றனரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினை இல்லை. ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது.

அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடரும்.” - என்றார்.

## வீட்டிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பிக விஜேரத்ன (வயது - 53), அவரது மனைவி (வயது - 44) மற்றும் மூத்த மகள் (வயது - 16) ஆகியோர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமையவே அவர்களின்சடலங்கள்மீட்கப்பட்டுள்ளன.

வீட்டுக்குள் வெவ்வேறான இடங்களிலேயே சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆணின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இளைய மகள் உயிர் தப்பியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இவர்கள் தற்கொலை செய்துகொண்டனரா அல்லது இது கொலைச் சம்பவமா என்ற கோணத்தில் பேராதனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சகோ தரன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - 1ஆம் குறுக்குத் தெரு, மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய வைரமுத்து சாந்தலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபரும் 56 வயதுடைய சகோதரியும் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் வசித்து வந்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் அவர் கொலை செய்யப்பட்ட நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் உயிரிழந்தவரது சகோதரி வழங்கிய வாக்குமூலத்தில்,

“நான் குறி சொல்லும் வேலை செய்து வருகின்றேன். இரவு மூவர் வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்டனர். அவர்களுக்குத் தண்ணீர் எடுப்பதற்காக உள்ளே சென்ற வேளை அவர்கள் உள்ளே வந்து என்னைக் கட்டிப் போட்டு விட்டு நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

பின்னர் அதிகாலை 3 மணியளவில் நான் கட்டை அவிழ்த்துவிட்டு வெளியே வந்து பார்த்த வேளை தம்பி சடலமாகக் காணப்பட்டார்.” - என்று கூறியுள்ளார்.

இருப்பினும் மேற்படி பெண் வழங்கிய வாக்கு மூலத்தில் திருப்தியடையாத பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிடியாணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நீதிமன்றில் ஆஜரானதையடுத்துப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அநாகரிகமாக நடந்து கொண்ட குற்றத்துக்காக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை மீண்டும் அழைக்கப்பட்ட போது, நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்தார்.

இதனால் அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால், நாமல் ராஜபக்ஷ நேற்று காலை திருமண நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக மாலைதீவுக்குச் சென்றிருந்த மையால் இன்று மீண்டும் நாடு திரும்பி பிடியாணை உத்தரவுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்து அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரானதையடுத்துப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து 25 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

மகோற்சவ திருவிழாக்களில் மஞ்சள் திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 7ஆம் திகதியும் , மாம்பழத் திருவிழா ஒகஸ்ட்19ஆம் திகதியும், சப்பரத் திருவிழா ஒகஸ்ட் 20ஆம் திகதியும், தேர்த் திருவிழா ஒகஸ்ட் 21ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா ஒகஸ்ட் 22ஆம் திகதி காலை இடம்பெற்று , மாலை கொடியிறக்கம் இடம்பெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின்படி, எதிர்வரும் ஒகஸ்ட் 24ஆம் திகதி வரையில் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதித்தடைக்குள்நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல் மாநகர சபையால் வாகன அனுமதி அட்டை வழங்கப்படும். நிரந்தர தற்காலிக வியாபாரிகளுக்குப் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆலய வெளிவீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்களை மாத்திரமே ஒலிபரப்புச் செய்ய முடியும். உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுளின் உருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்தல், வானூர்தியைப் பயன்படுத்தி பூ சொரிதல் மற்றும் வான வேடிக்கை நிகழ்வுகளைச் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உற்சவ காலங்களில் ஆலய வெளிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

## ஜெயவர்தனபுர பொது மருத்துவமனையின் தவிசாளர் இராஜினாமா

ஸ்ரீ ஜெயவர்தனபுர பொது மருத்துவமனையின் தவிசாளரும், மகப்பேறு மருத்துவருமான ஆலோசகர் வைத்தியர் ஜயங்க திலகரத்ன தனது ராஜினாமா கடிதத்தை சுகாதார அமைச்சரிடம் அளித்துள்ளதாக டெய்லி மிரர் பத்திரிகை தகவல் அறிந்துள்ளது.

அவரது கடிதத்தை சுகாதார அமைச்சர் ஏற்றுக கொண்டதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவர் ஒக்டோபர் 2024 இல் தலைவராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், இந்த நியமனம் அரசியல் நோக்கம் கொண்டது என்று மருத்துவத் துறையினர் விமர்சித்தனர்.

பதுளை போதனா மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக வைத்தியர் திலகரத்ன கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தங்க முலாம் பூசப்பட்ட ரி – 56 துப்பாக்கி:

## வழக்கில் இருந்து துமிந்த விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 29

தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது.

பல வாரங்கள் தடுப்புக் காவலில் இருந்த பின்னர் கடந்த வாரம் அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் மாலைதீவு பயணம்- புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவின் அழைப்பின்பேரில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று (28) காலை மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையின் மரியாதைக்கு மத்தியில், மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை அன்புடன் வரவேற்றார்.

பின்னர் நேற்று (28) பிற்பகல் மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு மகத்தான வரவேற்பளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பு இட்ட பிறகு, இரு நாடுகளின் தலைவர்களும் உத்தியோகபூர்வ புகைப்படம் பிடிக்கும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

அதன் பின்னர் ஜனாதிபதிக்கும், மாலைதீவு ஜனாதிபதிக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அதன்படி மாலைதீவு வெளியுறவு சேவை நிறுவனம் (குமுளுஜஆ) மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொர்பான ஒப்பந்தம் என்பன பரிமாறப்பட்டன.

குறித்த ஒப்பந்தங்கள் மாலைதீவு மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகளிலான உறவுகளையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குற்றங்களைக் கையாள்வதில் பரஸ்பர சட்ட உதவி வழங்குவதை முதலாவது ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரண்டாவது ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கும் இடையில் இராஜதந்திர பயிற்சி அளிப்பது மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே தகவல் மற்றும் ஆவணங்களைப் பரிமாறிக்கொள்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தங்களை மாலைதீவு சார்பில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கலாநிதி அப்துல்லா கலீல் மற்றும் இலங்கை சார்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் பரிமாறிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு ஆகியோர் மாலைதீவுக்கான அரச விஜயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டிக் டொக் காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்க வீட்டில் நகைகளை களவாடிய யுவதி கைது!

டிக் டொக் சமூக வலைத்தளத்தில் அறிமுகமான காதலனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்குவதற்காக வீட்டில் நகைகளை களவாடிய யுவதி உள்ளிட்ட ஏழு பேரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் டிக் டொக் சமூக வலைத்தளத்தில் காணொளிகளை பதிவேற்றி தன்னை பிரபலமானவராக காட்டிக்கொண்டு வந்துள்ளார்.

குறித்த இளைஞனுடன் டிக் டொக் மூலம் அறிமுகமான சாவகச்சேரி பகுதியை சேர்ந்த யுவதி, அவரை காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் தனது காதலனுக்கு, அதிநவீன மோட்டார் சைக்கிள் ஒன்றினை கொள்வனவு செய்வதற்காகவும், காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காவும், தனது வீட்டில் இருந்து சுமார் 19 பவுண் நகையை களவாடி அதனை காதலனிடம் கொடுத்துள்ளார்.

வீட்டில் இருந்த நகைகள் காணாமல் போனமை தொடர்பில், யுவதியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யுவதி மீது சந்தேகம் கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, வீட்டில் இருந்த நகைகளை தான் களவாடி காதலனுக்கு வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார்.

யுவதியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில், வீட்டில் நகைகளை களவாடிய யுவதி, அவரது காதலன், யுவதி வீட்டில் நகைகளை களவாட உடந்தையாக செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரை பொலிஸ ார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில்லாம மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்மை குறிப்பிடத்தக்கது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம் இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!